**செய்தி வெளியீடு எண்:1324** **நாள்:11.12.2021**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றுத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் கிண்டியில் உள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகத்தில் வாரிய பொறியாளர்களுக்கான ஆய்வு கூட்டம் 10.12.2021 அன்று மாலை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு முதன்மை செயலாளர், வாரியத்தின் தலைவர், வாரிய உறுப்பினர் செயலர், தலைமை அலுவலக துறைத்தலைவர்கள், மாநிலம் முழுவதும் உள்ள இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் பங்கேற்றனர்.

இந்த ஆய்வு கூட்டத்தின் போது மாநிலம் முழுவதும் சுற்றுச்சூழல் தொடர்பான முக்கிய பிரச்சினைகளை கையாளுவது, அவற்றிற்கு தீர்வு காண்பது, ஆறுகள் மற்றும் நீர்நிலைகள் மாசு அடையாமல் பாதுகாப்பது தொடர்பான அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வாரிய பொறியாளர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தொழில் வளர்ச்சியால் ஏற்படும் நன்மைகளுக்காக சுற்றுச்சூழல் பாதிப்பினை ஏற்றுக்கொள்ள இயலாது எனத்தெரிவித்தோடு அனுமதியின்றி செயல்படும் கல்குவாரிகளை கண்டறிந்து அவற்றின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், தென்னைநார் தொழிற்சாலைகளால் ஏற்படும் நில, நீர் மற்றும் காற்று மாசினை கட்டுப்படுத்த அவற்றை முறைப்படுத்த வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

மேலும், தோல்தொழிற்சாலைகள் மற்றும் சலவை தொழிற்சாலைகளுக்காக அமைக்கப்பட்ட பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் தேக்கமடைந்துள்ள உப்புகழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அறிவுரை வழங்கினார்.

இராணிப்பேட்டையில் நீண்ட காலமாக வைக்கப்பட்டுள்ள குரோமியக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் மூடி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பாலாற்றில் இரசாயன கழிவுகளை வெளியேற்றாமல் தடுக்க தொடர் கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும் அறிவுரை வழங்கினார்.

உள்ளாட்சி அமைப்புகளுடன் தொடர் ஆலோசனை நடத்தி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும்,

சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் விவசாயத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

மேலும், நகர பகுதிகளில் காற்று மாசினை கட்டுப்படுத்தி வாழ்வதற்கு உகந்த பகுதிகளாகமாற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதலின்படி கோழிப்பண்ணைகளை வாரியத்தின் கண்காணிப்பின்கீழ் கொண்டுவரவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

மேலும், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினை முற்றிலுமாக தடுப்பதற்கு உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், சுற்றுச்சூழல் மாசு தொடர்பாக பொது மக்கள் புகார் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், தொழிற்பேட்டைகளில் காற்று மாசினை குறைக்க மண் சார்ந்த நாட்டு மரங்கள் நடுவதற்கு தொழிற்சாலைகளை ஊக்குவிக்க வேண்டும் எனவும், அபாயகரமான தீங்கு விளைவிக்கும் கழிவுகளை சிமெண்ட் தொழிற்சாலைகள் மூலம் வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாசு கட்டுப்பாடு வாரியம் இந்திய அளவில் முதன்மை நிலையை அடைவதற்கு அனைவரும் சிறப்பாக பணியாற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**